**தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் - 2023**

-----------------------------------------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் (“மன்றம்”) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1979 இன் 69 ஆம் தேசிய இளைஞர் சேவைகள் சட்டம், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, மன்றத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி

இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- மன்றத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- மன்றத்தின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்
### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமத்துடன் தொடர்பும் இணக்கமின்மையும் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மன்றத்திற்கு எதிராக ஒப்பந்தக்காரர் ஒருவரினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கொன்றின் தீர்ப்பின் மீது 2024 ஆண்டின் போது ரூபா 5.92 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த நிகழத்தக்க பொறுப்பு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இற்கு இணங்க நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்கள் என இனங்கண்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் இவ்வாறான நிகழத்தக்க பொறுப்புக்களை இனங்கண்ட சந்தர்ப்பத்திலேயே சரியான ஏற்படுகள் மேற்கொள்ளும் படி அறிவுரை வழங்கப்பட்டது என. | பொறுப்புக்களை இனங்கண்டு உரிய முறையில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இற்கு இணங்க சபையினால் தற்போது அனுபவித்து வருகின்ற நியாயமான பெறுமதியை இனங்காணக் கூடிய 04 காணிகளின் பெறுமதியை மீள்மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிக்கப்படவில்லை. | நியாயமான பெறுமதியை இனங்காணக்கூடிய சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 09 இன் படி இருப்புக்களை மதிப்பீடு செய்யும் கொள்கை அறுதியாக இனங்கண்டிருக்காததுடன், 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நுகர்வுப் பண்ட இருப்பில் காணப்பட்ட ரூபா 1.29 மில்லியனிற்கான பயன்படுத்த முடியாத 97 விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் சீராக்கல்கள் மேற்கொண்டிருக்கவில்லை. | 2024 ஆண்டில் ஏலவிற்பனை செய்தல் மாற்றுதல், அழித்தல் மற்றும் வழங்குதல் மேற்கொள்ளப்பட்டது. | இருப்புக் கணிப்புக் கொள்கை அறுதியாக இனங்காணப்பட வேண்டியதுடன், பயன்படுத்த முடியாத விடயங்கள் தொடர்பாக உரிய சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் கூட்டுத்தொகை ரூபா 871,474 இற்கான ஐயக் கடனுக்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய கொள்கைகளை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | 2024 நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தும் படி அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆண்டிற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 2.17 மில்லியன் கணக்காய்வுக் கட்டணம், கணக்காய்வுக் கட்டண ஒதுக்கக் கணக்கிற்கு சீராக்கல் மேற்கொள்ளாமல் மீளாய்வாண்டின் கணக்காய்வுக் கட்டணம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை மற்றும் கணக்காய்வுக் கட்டண ஒதுக்கக் கணக்கு மீதி அந்த அளவினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | 2024 ஆண்டு சரி செய்யப்பட்டது. | கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டின் போது வரிசை அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் 12 மாவட்ட செயலகங்களினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 15.46 மில்லியன் தொகை பெறுமதியான சொத்துக்கள் மீளாய்வாண்டில் மன்றத்திற்கு வழங்கியிருந்த போதிலும், அந்தச் சொத்துக்கள் சபையின் தலைமை அலுவலகத்தின் சொத்துக்கள் பதிவேட்டில் அல்லது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. அதேபோல், மீளாய்வாண்டின் போது வரிசை அமைச்சினால் மூலதன மானியங்கள் என மன்றத்திற்காக வழங்கியிருந்த ரூபா 6.6 மில்லியனிற்கான ஏற்பாடுகள் சபைக்கு அனுப்பாமல் அம்பாறை மாவட்ட செயலகத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தமையால் திறைசேரியிலிருந்து கிடைத்திருந்த மூலதன மானியம் மற்றும் மன்றத்தின் மூலதன மானியம் இடையே ரூபா 6.64 மில்லியனிற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | 2024 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது கணக்கீடு செய்யும் படி உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. | சொத்துக்களை சரியாக இணங்க கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | ஆசிய அபிவிருத்தி வங்கி மானியத்தின் கீழ் (SSDP) செயற்படுத்தப்பட்ட மகளிர் | 2024 ஆண்டு சரி செய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வலுவூட்டல் செயற்திட்டத்திலிருந்து மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சிலிருந்து மன்றத்திற்கு 2023 ஆண்டில் மற்றும் 2015 ஆண்டில் கிடைத்திருந்த முறையே ரூபா 12.66 மில்லியனிற்கான கவர்ச்சிகர வகுப்பறை உபகரணங்களின் பெறுமதி மற்றும் ரூபா 63.90 மில்லியன் பெறுமதியுடைய 10 வாகனங்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டுக்கு உட்படுத்தி கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஈ) | தொடர்ந்து வரும் வருடத்திற்காக மீளாய்வாண்டின் போது மேற்கொண்டிருந்த ரூபா 3.68 மில்லியனிற்கான செலவு மீளாய்வாண்டிற்கான செலவு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான பற்றாக்குறை அந்தத் தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தன. | 2024 ஆண்டில் சரி செய்யப்பட்டது. | செலவுகளை சரியாக இனங்கண்டு சரி செய்யப்பட வேண்டும். |
| (உ) | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தலைமை அலுவலகத்தினால் பேணிச் செல்லப்படுகின்ற நடைமுறைக் கணக்கு தொடர்பான வங்கி இணக்கக் கூற்றில் ரூபா 2.54 மில்லியனிற்கான இனங்காணப்படாத செலவு வைத்தல்கள் காணப்பட்டதுடன், 2024 ஏப்ரல் மாதம் அளவிலும் அந்த செலவு வைத்தலை இனங்கண்டு உரிய சீராக்கல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமையால் அந்தப் பெறுமதி ரூபா 12.52 மில்லியன் தொகை வரை அதிகரித்திருந்தது. | 2024.09.11 திகதி வருமானத்திற்கு எடுக்கப்பட்டது. | வங்கிக் கணக்குகள் உரிய முறையில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | முறையான அங்கீகாரம் ஒன்றின்றி மனித மற்றும் பௌதீக வளங்களை பயன்படுத்தி நடாத்திச் செல்லும் விளையாட்டுக் கழகங்களின் கீழ் மீளாய்வாண்டு இறுதியில் காணப்பட்ட ரூபா 11.61 மில்லியனிற்கான சேமிப்புக் கணக்கின் மீதி, ரூபா 20,000 இற்கான நடைமுறைக் கணக்கின் மீதி மற்றும் ரூபா 16.25 | 2024 நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களுக்கு உட்படுத்தும் படி அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவுகளை சரியா இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியனிற்கான நிலையான வைப்பு மீதி நிதிக்கூற்றுக்களுக்கு எடுத்திருக்கவில்லை. | | |
| (எ) | மீரிகம பயிர்ச்சி நிலையத்திற்கான திரைச் சீலை கொள்வனவு செய்வதற்காக மீரிகம பிரதேச செயலாளருக்கு செலுத்தியிருந்த ரூபா 2.95 மில்லியன் முற்பணத் தொகை 2024 செப்தம்பர் 20 திகதி அளவிலும் அந்தக் கருமத்திற்காக பயன்படுத்திருக்கவில்லை. எனினும், அந்தத் தொகை மீளாய்வாண்டிற்கான செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான பற்றாக்குறை மற்றும் முற்பணங்கள் அந்தத் தொகையினால் மிகையாக மற்றும் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | இந்தக் கருமத்தை விரைவாக பூர்த்தி செய்யும் படி மீரிகம பிரதேச செயலாளருக்கு 2024.09.02 திகதி மீண்டும் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. | வழங்கப்பட்டிருந்த முற்பணத் தொகைக்குரிய கருமங்களை நிறைவேற்றிக் கொண்ட கொண்ட பின்னர் செலவு என இனங்காண நடைவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| **விடயம்** | **நிதிக்கூற்றுக்களின் படி பெறுமதி** | **நேரொத்த அறிக்கையின் படி பெறுமதி** | **வித்தியாசம்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|---|
| | **ரூபா மில்லயன்** | **ரூபா மில்லயன்** | **ரூபா மில்லயன்** | | |
| நிருவகிக்கும் கம்பனிகளுக்கு செலுத்த வேண்டிய மீதி | 1.18 | 110.94 | 109.76 | எதிர் காலத்தில் கம்பனியுடன் கலந்துரையாடி தீர்மானம் ஒன்று எடுக்கும் படி அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | வரையறுக்கப்பட்ட யூத் சேர்விஸல் (பிரைவட்) டிமிடட் கம்பனிக்கு செலத்த வேண்டிய கடன் மீதிகளை கம்பனியின் தகவல்களுடன் பரிசோதனை செய்து சரி செய்ய நடவடிக்கை வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை<br>ரூபா மில்லயன் | வழங்கப்படாத கணக்காய்வச் சான்றுகள்<br>ரூபா மில்லயன் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| இளைஞர் அபிவிருத்திச் செலவு, தெஹிவல பயிற்சி நிலைய இலாபம் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் கொள்வனவு செய்துல் | 383.13 | அட்டவணைகள், இலாபம் கணித்தல் தொடர்பான விபரங்கள், கொள்வனவு செய்த விளையாட்டுப் பண்டங்கள் தொடர்பான விபரங்கள் | நிதிச் செயலாற்றல் கூற்றில் இளைஞர் அபிவிருத்திச் செலவின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 370,912,806 இற்கான செலவுகள் தொடர்பாக அட்டவணைகள், தகவல்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>தெஹிவல பயிற்சி நிலையத்தின் 2022.12.31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>கொள்வனவு செய்திருநத விளையாட்டுப் பண்டங்களின் தேவைப்பாடு தீர்மானிக்கப்பட்டிருந்தது 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் இளைஞர் கழகங்களின் இளைஞர்கள் மற்றும் யுவதிகளினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கோறிக்கைகளை மற்றும் அனைத்து மாவட்டங்களும் அடங்கக்கூடியவாறு ஆகும். | கணக்காய்விற் காக வேண்டப்பட்டு ள்ள அனைத்து எழுத்துமூல சான்றுகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெற வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு ரூபா 144.55 மில்லியன் தொகை காணப்பட்டதுடன், அவற்றில் 05 வருடங்களை விட மிகையாக காலம் முதல் காணப்படுகின்ற ரூபா 18.75 மில்லியன் மீதியொன்றினை | பெற வேண்டிய மீதிகளின் பெறுமதிகள் 2024 ஆண்டில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடப்பட வேண்டிய தொகைகளை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு அல்லது தேவையானவாறு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |

### 1.6.2 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆண்டு முதல் பல்வேறு கருமங்களுக்காக தனியார் நிறுவனங்களிலிருந்து கிடைத்திருந்த ரூபா 1.85 மில்லியனிற்கான பெறுவனவுகளை தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தகவல்களை கண்டறிந்த பின்னர வருமானத்திற்கு எடுக்கும் படி அறிவுரை வழங்கப்பட்டது. | செலுத்த வேண்டிய தொகையினை தாமதமின்றி தீர்ப்பதற்கு அல்லது தேவையான செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 இலக்க நிதி அதிகார சட்டத்தின் பிரிவு 08 | மன்றத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் நிதியம் கிடைக்கும் வழிகள் தொடர்பாக எதிர்வுகூறல் மேற்கொள்ளாமல் செலவுகள் மாத்திரம் எதிர்வு கூறப்பட்டிருந்தது. | பாதீட்டில் நிதியம் பெறும் வழிகள் தொடர்பான எதிர்வு கூறல்கள் மேற்கொண்டு பாதீடு தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | பாதீடு முகாமைத்துவத்தின் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்துவதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தியிருந்த செயற்பாட்டுக் கைநூலின் பிரிவு 3.5 | சுற்றறிக்கைக்கு முரணாக ஏனைய அமைச்சுக்களுக்கு இரண்டு உத்தியோகத்தர்கள் எதுவித அங்கீகாரமும் இன்றி விடுவிக்கப்பட்டிருந்தது. | தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உத்தியோகத்தர்கள் அமைச்சுக்கு அல்லது நிறுவனத்திற்கு தற்காலிக அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | 2022 ஜனவரி 14 திகதிய அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் சுற்றறிக்கை இலக்கம் 01/2015(2) | சபையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் 02 பணிப்பாளர்கள் சுற்றறிக்கையின் படி உரித்துள்ள எரிபொருள் கொடுப்பனவை மிகைத்து ரூபா 2.48 மில்லினிற்கான எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது. | இளைஞர் சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் 2023 ஏப்ரல் மாதம் முதல் திசெம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் பயன்படுத்தப்பட்ட | முறையான அங்கீகாரம் இன்றி வரையறையை மிகைத்து எரிபொருள் பயன்படுத்துவதை தவிர்ந்துகொள்ள வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எதிபொருளுக்காக வரிசை அமைச்சுச் செயலாளரிடம் பெற்றுக்கொள்ள வேண்டிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது. | |
| (ஈ) | 2009 ஏப்ரல் 16 திகதிய 09/2009 இலக்கம் கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கையின் படி | சபையின் மாகாண அலுவலங்கள், மாவட்ட அலுவலகங்கள், பயிற்சி நிலையங்கள் மற்றும் பண்ணைகளில் விரல் அடையாளம் பதிவதற்காக இயந்திரங்கள் பொறுத்தப்பட்டிருக்கவில்லை. | புதிய இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்காக பரிந்துரை பெற்றுக்கொள்வதற்காக தலைவர் / இளைஞர் சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் குழுவொன்று நியமனம் செய்துள்ளதுடன், அந்தக் குழுவின் பரிந்துரையின் மீது தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். | பதவியணியினரின் உள்வருதல் மற்றும் வெளிச் செல்லல் விரல் அடையாள இயந்திரங்கள் மூலம் பதிவு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவை | | | |
| i. | அத்தியாயம் XV பிரிவு 10 | நாட்டிலிருந்து வெளிச் செல்லும் போது பிரதமரின் பூர்வாங்க அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணாக ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் பணிப்பாளர் ஒருவருக்கு ரூபா 185,398 தொகை செலவிடப்பட்டு வரிசை அமைச்சரின் அங்கீகாரத்தின் மீது மாத்திரம் வெளிநாட்டுச் சுற்றுலா ஒன்றில் பங்குபற்றியிருந்தார். | எதிர் காலத்தில் அனைத்து பதவியணித் தர உத்தியோகத்தர்களுக்காக இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் கௌரவ பிரதமரினால் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளும் படி குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. | பிரதமரின் பூர்வாங்க அங்கீகாரம் இன்றி வெளிநாட்டுச் சுற்றுலாக்களை தவிர்ந்து கொள்ள வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| ii. | அத்தியாயம் XV பிரிவு 11.1 | 2023 செப்தம்பர் மாதம் 12 திகதி ரூபா 39.40 மில்லியன் தொகை செலவிடப்பட்டு வெளிநாட்டு சுற்றுலா ஒன்றிற்காக சிக்கன வகுப்பு நுழைவுச்சீட்டு பயன்படுத்துவதற்கு பதிலாக பணிப்பாளர் நாயகத்திற்கு ரூபா 2.77 மில்லியன் செலவிடப்பட்டு வணிக வகுப்பு நுழைவுச்சீட்டு வழங்கப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு முரணாக செயற்படுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். |
| (ஊ) | அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டிருந்த ஊழியர் சிக்கல்கள் மற்றும் ஒழுங்கீனங்கள் தொடர்பான பரிந்துரைகளில் பரிந்துரை இலக்கம் 10 | பரிந்துரைகளுக்கு முரணாக இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் ஒருவருக்கு உதவிப் பணிப்பாளர் (அணவல்) உட்பட 03 பதவிகள் வழங்கப்பட்டிருந்தன. | அமைச்சினால் நியமனம் செய்யப்பட்ட குழுவினால் வெளியிடப்பட்டிருந்த ஊழியர் சிக்கல்கள் மற்றும் ஒழுங்கீனங்கள் தொடர்பான பரிந்துரை இலக்கம் 10 இன் கீழ் தற்போது வழங்கப்பட்டுள்ள அணவல் பதவியை அகற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கும் படி அறிவிக்கப்பட்டுள்ளதால் அந்தப் பரிந்துரையை செயற்படுத்த முன்னர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டியமையால் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்ற பின்னர் அனவல் பதவியை அகற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | அமைச்சுக் குழுவின் பரிந்துரையின் படி செயற்பட வேண்டும். |
| (எ) | 2023 மார்ச் 31 திகதிய 13/2023 இலக்கம் கொண்ட பணிப்பாளர் சபை தீர்மானம் | நிதி உத்தியோகத்தர் பதவிகளில் காணப்படும் 06 வெற்றிடங்களுக்காக உள்ளக பதவியுயர்வுகளின் மூலம் நிரப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த பதவிகளை இது வரை நிரப்புவதற்கு நடவடிக்கை | 2023.03.31 திகதி நடைபெற்ற மன்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் மன்ற விஞ்ஞாபன இலக்கம் 13/2023 இன் படி 06 நிதி உத்தியோகத்தர் வெற்றிடங்கள் தொடர்பாக உள்ளகப் | நிதி உத்தியோகத்தர் பதவியை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| | எடுத்திருக்கவில்லை. அந்தக் காரணத்தினால் ஒரு உத்தியோகத்தர் 02 மாகாணங்களில் நிதி உத்தியோகத்தர் பதவியில் கடமையாற்றப்படுகின்றது. | பதவியுயர்வு மேற்கொள்வதற்கு சபை விஞ்ஞாபனம் அங்கீகரித்திருந்ததுடன், இந்தச் சந்தர்ப்பத்தில் சனாதிபதி தேர்தல் நடைபெறுவதால், தேர்தலின் பின்னர் நிதி உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 68.3 மில்லியனிற்கான பற்றாக்குறை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 255.7 மில்லியன் தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 187.4 மில்லியன் தொகைக்கான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்புக்கு உள்ளக உழைப்புக்கள் மற்றும் அரச பங்களிப்புக்கள் அதிகரித்தல் பிரதானமான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நாட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஊழியர் சேமலாப நிதியத்திற்கு உரிய முறையில் பங்களிப்புத் தொகைகள் அனுப்பப்படாமையால் ரூபா 205,036 இற்கான மிகை விதிப்பொன்று மீளாய்வாண்டின் போது செலுத்த வேண்டி நேரிட்டிருந்தது. | கம்பஹா தொழில் அலுவலகத்தின் மூலம் நீதிவான் நீதிமன்றில் வழங்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமையால் நீதிமன்ற கட்டளையின் படி இந்த தொகை செலுத்த நேரிட்டிருந்தது. | ஊழியர் சேமலாப நிதியத்திற்கு உரியாறு பங்களிப்புத் தொகை செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | தலைவரின் தற்றுணிவின் படி உத்தியோகத்தர்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்காக சபையின் கட்டிடங்கள் இலவசமாக அல்லது கழிவுடன் வழங்கப்படுவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் காணப்படாத போதிலும், தனியார் நிறுவனங்களுக்கு கட்டிடங்கள் இலவசமான மற்றும் கழிவுடன் கட்டிடங்கள் வாடகைக்கு வழங்கப்பட்ட காரணத்தினால் ரூபா 3.80 மில்லியனிற்கான வாடகை வருமானம் ஒன்றினை மீளாய்வாண்டின் போது மன்றம் இழந்திருந்தது. | ஸ்ரீ லங்கா யூத் வளாகத்தில் வசதிகளை வழங்குவதற்காக அறவீடு செய்யப்படும் கட்டணத்தை திருத்துவதற்காக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மன்ற பணிப்பாளர் சபை தீர்மானம் 2022/24 மூலம் காட்டப்பட்டுள்ளது. | நட்டத்திற்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்யப்பட வேண்டியதுடன், சபையின் வளங்கள் வாடகைக்கு கொடுக்கும் போது அதற்காக முறையான பொறிமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இளைஞர் சங்கங்களின் இளைஞர்கள் யுவதிகளின் பங்களிப்புடன் புதிய ஆக்கங்களை வெளியிடுதல் சபையின் குறிக்கோள் ஒன்றாக காணப்பட்ட போதிலும் அதற்கு முரணாக நடிகர் நடிகைகள் தொடர்பு கொண்டு தொலைக்காட்சி நாடகங்கள் இயக்கி அதற்காக ரூபா 4.83 மில்லியன் தொகை மேற்கொண்டிருந்ததுடன், இது வரை தொலைக்காட்சி நாடகத்தின் அலுவல்களும் முடிவடைந்திருக்கவில்லை. | சுவாதீனத் தொலைக்காட்சி அலைவரிசையினால் தேர்தலின் பின்னர் குறிப்பிட்ட பகுதிகளை ஒளிபரப்புவதற்காக இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இந்த தொலைக்காட்சி ஆக்கங்கள் தொலைகாட்சி அலைவரிசை ஊடாக பணம் அறவீடு செய்து வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், எதிர் காலத்தில் இவ்வாறான அர்த்தமற்ற கருமங்களுக்காக ஈடுபடாமல் இருப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட குறிக்கோல்கள் நிறைவேற்றக்கூடியவாறு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு முறையான மேற்பார்வையின் கீழ் செயற்படுத்தப்பட வேண்டியதுடன், அரசின் பணம் சிக்கனத்துடன் பயன்படுத்துவதற்கு விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் தலைமை அலுவலகத்தின் மற்றும் மாவட்ட அலுவலகங்களின் வ/ப இலங்கை தேசிய இளைஞர் சேவை கூட்டுறவு சங்கத்தின் அலுவலகங்கள் நிறுவனப்பட்டிருந்த போதிலும், அதற்கான எதுவித வாடகைகளும் அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் வாடகை அறவீடு செய்வதற்கான செய்முறையொன்று தயாரிப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | வருமானம் அறவீடு செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இளைஞர் யுவதிகளை விவசாய தொழில்நுட்பத்தை கடைபிடிக்க வைக்கும் குறிக்கோளுடன் ரூபா 250 மில்லியன் ஏற்பாடுகளின் கீழ் 2022 – 2025 ஆண்டுகளில் செயற்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்டிருந்த விவசாய தொழில் முயற்சி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் இளைஞர் விவசாய உற்பத்திக் கம்பனிகள் நிறுவும் நிகழ்ச்சித் திட்டம் ஆகிய எதுவித கருமங்களும் மீளாய்வாண்டின் போது செயற்படுத்தியிருக்கவில்லை. | மீளாய்வாண்டில் உரிய முறையில் விவசாய கம்பனிகளை செயற்படுத்த முடியாமல் போன போதிலும் தற்போது 21 விவசாயக் கம்பனிகள் இலங்கை பூராகவும் நிறுவப்பட்டுள்ளது. | விவசாய தொழில் முயற்சி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் இளைஞர் விவசாய உற்பத்திக் கம்பனிகள் நிறுவுவதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | சபையின் பிரதான களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 3.5 மில்லியன் பெறுமதியான 37 வகையான விடயங்கள் பிரதான களஞ்சியத்தில் இருந்து பல்வேறு | பல வருட காலம் பழமையான பெறுமதியினை அறவீடு செய்வதற்கு போதியளவு எழுத்துமூலத் தகவல்கள் மற்றும் ஆவணங்கள் காணப்படின் அது | சபை இழந்துள்ள பெறுமதியை தாமதமின்றி பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் |

| | | | |
|---|---|---|---|
| | நபர்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்கு தற்காலிக அடிப்படையில் வழங்கியிருந்ததுடன், அவற்றை திருப்ப தலைமை அலுவலகத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு அல்லது பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் அதற்கான பெறுமதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | தொடர்பாக கவனம் செலுத்தி அரச தொழில் முயற்சித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள 2021.11.16 திகதிய அரச தொழில் முயற்சிக்கான செயற்பாட்டுக் கைநூலின் அத்தியாய இலக்கம் 6.9 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது. | அறவீடு செய்தல் மேற்கொண்டு முறைமையினை முறைப்படுத்த வேண்டும். |
| (ஈ) | 34 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவிற்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 729,600 தொகை பெறுமதியான 768 டீ-சேட்கள் அந்த விழா முடிவடைந்த பின்னரும் பல சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 320,150 தொகை பெறுமதியான 337 டீ-சேட்கள் அவற்றை பெற்றுக்கொண்ட நபர்கள் யார் என குறிப்பிடப்படாமல் பணிப்பாளர் நாயகம் என குறிப்பிடப்பட்டு களஞ்சியத்திலிருந்து வழங்கப்பட்டிருந்தது. மற்றும் பாடசாலைகள் மற்றும் இளைஞர் சங்க மட்டத்தில் வினியோகிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 800,000 இற்கான 100 காற்பந்துகள் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகம் என்ற பெயரில் வெளியிடப்பட்டிருந்தது. | தலைவரினால் அவ்வப்போது இளைஞர் யுவதி தொகுதிகளை சந்திக்கும் சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தியிருந்ததுடன், அவ்வாறான சந்தர்ப்பங்களில் இளைஞர் யுவதிகளுக்கு இந்த டீ-சேட்கள் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு வழங்கும் போது பலவேறு தேசிய போட்டிகளுக்காக மாவட்ட மற்றும் தேசிய மட்டத்தில் பங்குபற்றும் இளைஞர் யுவதிகளுக்கு முக்கியத்தும் வழங்கப்பட்டது.<br><br>பொலிஸ் நிலையத்தினால் இளைஞர் விளையாட்டுக் குழுக்களுக்கு வழங்குவதற்காக 100 காற்பந்துக்கள் வழங்கும் படி அப்போதைய விடயத்திற்கு பொறுப்பான கௌரவ விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சரின் கோறிக்கையின் படி பிரதான களஞ்சியத்திலிருந்து இந்த காற்பந்துக்கள் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு பெற்றுக்கொண்டு பொலிஸ் திணைக்களத்திற்கு வினியோகிக்கப்பட்டது. | கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்களை வினியோகிக்கும் போது முறையான செய்முறை ஒன்று கடைபிடிக்கப்பட வேண்டும். |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1979 இன் 69 ஆம் இலக்க தேசிய இளைஞர் சேவைகள் மன்றச் சட்டத்தின் பிரிவுகள் 4(ஊ), 5(2)(எ) மற்றும் 5(2)(ஏ) | சபைக்குச் சொந்தமாக காணப்படுகின்ற 05 பண்ணைகளில் விவசாயத் துறைக்குரிய பாடநெறிகள் | சட்டத்தில் காட்டப்பட்டுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு முகாமைத்துவத்தினால் |

| | | | |
|---|---|---|---|
| | இற்கு இணங்க இளைஞர் யுவதிகளை விவசாயத் துறைக்கு ஈர்த்துக்கொள்வதற்காக பண்ணைகள் ஆரம்பிப்பது குறிக்கோளாக இருந்த போதிலும் மன்றத்தில் காணப்படுகின்ற 09 பண்ணைகளில் பயிற்சிப் பாடநெறிகள் நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது செயற்படுத்தப்படுவதுடன், 2025 ஜனவரி மாதம் அளவில் மேலும் 04 பண்ணைகளில் விவசாய துறைக்குரிய பாடநெறிகள் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளின் போது தெஹிவல பயிற்சி நிலையத்தின் பாடநெறிகளுக்காக கட்டணம் செலுத்தி பதிவு செய்திருக்காத 341 மாணவர்களுக்கு மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தேசிய தொழிற் தகைமையுடனான (NVQ) சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தது. மேலும், சான்றிதழ்கள் வழங்கும் உரிமை பயிற்சி நிலையங்களுக்கு காணப்படாத போதிலும் அதற்கு முரணாக சபையின் பரீட்சைகள் மற்றும் மதிப்பாய்வுக் குழுவினால் உறுதிப்படுத்தப்படாத 791 சான்றிதழ்கள் பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்டிருந்தது. | வழங்கப்பட்ட சான்றிதழ்களின் தகவல்கள் Scan செய்து பரீட்சை மதிப்பாய்வு பிரிவின் தரவு முறைமைக்கு உள்ளீடு செய்து பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்டுள்ள 791 சான்றிதழ்களும் பரீட்சைப் பிரிவினால் வெளியிடப்பட்டுள்ளது. | சான்றிதழ்கள் வழங்கும் போது வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுத்த வேண்டும். |
| (இ) | டிரோனர் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி 11 பண்ணைகள் மற்றும் நிலையங்களின் நில அளவை அலுவல்களுக்காக 02 தனியார் நிறுவனங்களுக்கு ரூபா 2.16 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதன்படி, தயாரிக்கப்பட்டிருந்த சட்டரீதியான நில அளவை குறிப்புக்கள் இது வரையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட நிலப் பகுதி டிஜிட்டல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி குறிப்பிட்ட பூமியை அபிவிருத்தி செய்வதற்காக இந்த நில அளவை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், அதற்குரிய தரவுகள் நிறுவனத்தில் காணப்படுகின்றது.<br><br>தரவுகள் வழங்கிய பின்னர் கொடுப்பனவு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டதென மேலும் அறிவிக்கின்றேன். | சட்டரீதியான நில அளவைக் குறிப்புக்களின் படி வரைபுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2014 முதல் 2023 ஆண்டு ஆரம்பம் வரையான காலப் பகுதியில் ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்பட்டிருந்த 04 வாகனங்களை | இந்த வாகனங்களில் 09 வாகனங்கள் தற்போது ஏல விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன், ஒரு வாகனம் பயிற்சி | வாகனப் பயன்பாட்டினை முகாமைத்துவம் செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அப்புறப்படுத்துவதற்கு அல்லது திருத்த வேலை மேற்கொண்டு அதனை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் மன்றத்தில் மற்றும் பயிற்சி நிலையங்களில் நிறுத்தப்பட்டிருந்தன. மேலும் 10 வாகனங்கள் ஆண்டு பூராகவும் ஓட்டப்படாத நிலையில் விளைவற்றுக் காணப்பட்டது. | அலுவல்களுக்காக வழங்கப்பட்டுள்ளது. | |

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இளைஞர் யுவதிகளை வலைய சர்வதேச இளைஞர் மாநாடுகள் மற்றும் செயலமர்வுகளுக்காக பங்குபற்ற வைக்கும் நோக்கத்துடன் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 4.89 மில்லியன் தொகை ஏற்பாடுகளை பயன்படுத்தி சபையின் பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர் (தொழில் மற்றும் தொழிற்பயிற்சி) மற்றும் மன்றத்திற்கு தொடர்பின்றிய பெண் ஒருவரை மாத்திரம் வெளிநாட்டு சுற்றுலாக்களில் பங்குபற்றப்படுத்தப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் அந்தக் கருமங்களுக்காக ஈடுபடுத்துவதற்கு முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இன்றி 2023 திசெம்பர் 31 திகதி தாமரை கோபுர வளாகத்தில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியொன்றின் போது மன்றத்தினால் ரூபா 10.29 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த நிகழ்ச்சித் திட்டம் நடாத்தியமையால் கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 6.86 மில்லியன் டிக்கட் பத்திர வருமானத்தை சபைக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினர்களிடம் குறிப்பிட்ட பணத்தினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இன்றி மன்றத்தின் குறிக்கோள்களுக்கு சம்பந்தமில்லாத காலநிலை தோற்றமாற்றத்தினை அடக்குதல் என்ற தலைப்பில் நிகழ்வு நிலை ஊடாக தனியார் ஹோட்டல் | தலைவர் / இளைஞர் சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுரையின் படி 2023 நவம்பர் 05 திகதி காலநிலை தோற்றமாற்றத்தினை அடக்குதல் தொடர்பான | முகாமைத்துவத் தகவல்களை கண்டறிந்து பரிந்துரைகள் சமர்ப்பித்தல் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒன்றில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் ஒன்றிற்காக ரூபா 1.19 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. | செயலமர்வு நடாத்தப்பட்டது. | |
| (ஈ) | தலைவரின் தற்றுணிவின் படி மற்றத்தின் பதவியணி அல்லாத தன்னார்வ பதவியொன்றிற்காக நபரொருவர் சேர்க்கப்பட்டு அவருக்கு மற்றத்தின் விடுதியில் தங்கும் வசதிகள் மற்றும் பணிப்பாளர் நாயகத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த வாகனம் அவருக்கு வழங்கப்பட்டு அதற்காக எரிபொருள் வழங்குவதன் மூலம் அரச வளங்கள் முறைசாரா பயன்பாட்டிற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | மீண்டும் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாது என அறிவிக்கின்றேன். | முறையான செய்முறைகள் கடைபிடிக்கப்பட வேண்டும். |

**3.5 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆண்டின் போது பணிப்பாளர் சபை தீர்மானம் ஒன்றின்றி மேல் மாகாண பணிப்பாளரினால் சபுகஸ்கந்த பயிற்சி நிலையத்தில் ரொபோடிக் பயிற்சிப் பாடநெறி ஆரம்பிக்கும் குறிக்கோளுடன் ரூபா 17.42 மில்லியன் தொகைக்கான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், அந்த பாடநெறிகள் ஆரம்பிப்பதற்கு முடியாமல் போனதால் விளைவற்றுக் காணப்பட்டது. மேலும், உரிய முறையில் தேவைப்பாடுகள் எதிர்வுகூறப்படாமல் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 7.70 மில்லியன் பெறுமதியான 31 விருதுகள் மற்றும் கதிரைகள் மற்றும் வாயு சீராக்கிகள் பயன்படுத்தப்படாமல் இதுவரை விளைவற்றுக் காணப்பட்டது. | புதிய ஆலோசகர்களின் கீழ் 2024.10.01 முதல் புதிய பாடநெறி ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு (2024) இளைஞர் விருதுப் போட்டியில் வெற்றி பெறும் வெற்றியாளர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | விளைவற்ற வளங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மன்றத்தினால் 2023 மற்றும் கடந்த ஆண்டில் ரூபா 4.7 மில்லியன் தொகை | புதிய இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்காக உரிய பரிந்துரைகள் | விரல் அடையாள இயந்திரங்களை பயன்படுத்துவதற்காக |

| | | |
|---|---|---|
| செலவிடப்பட்டு விரல் அடையாள பதிவு இயந்திரங்கள் கொள்வனவு செய்திருந்த போதிலும், அந்த இயந்திரங்களை உரிய முறையில் பயன்படுத்தியிருக்காமையால் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. | பெற்றுக்கொள்வதற்காக தலைவர் / இளைஞர்கள் சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன், அந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தொடர் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | முகாமைத்துவத்தினால் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.6 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 நவம்பர் 16 திகதி முதல் 19 திகதி வரை 34 ஆவது நடைபெற்ற தேசிய இளைஞர் விளையாட்டு விழா நடாத்துவதற்காக ரூபா 9.7 மில்லியனிற்கான உணவு, நீர் போத்தல்கள் மற்றும் டீ-சேட்கள் கொள்வனவு செய்யும் போது போட்டி விலை அழைக்கப்படாமல் விலைக் குழுவொன்றின் மூலம் அது மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் காரணமாக சந்தையில் நிலவும் மொத்த விலையின் படி 500 மி.லி. 20,600 குடிநீர் போத்தல்கள் ரூபா 30 வீதம் பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் காணப்பட்ட போதிலும், அதனை கவனத்தில் எடுக்காமல் ரூபா 70 வீதம் கொள்வனவு செய்ததனால் ரூபா 824,000 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | எச் சந்தர்ப்பத்திலும் ரூபா 30 கூறுவிலையொன்று கம்பனியினால் சமர்ப்பித்திருக்காமையால் எதுவித முறையற்ற கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படவில்லை என இத்துடன் அறிவிக்கின்றேன். | மன்றத்திற்கு உச்சமட்ட நலன் கிடைக்கக்கூடியவாறு போட்டி விலை அடிப்படையில் இவ்வாறான பெறுகைகள் மேற்கொள்ள வேண்டும். |

**3.7 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1994 முதல் 2014 வரையான காலப் பகுதியில் அரசியல் காரணங்களினால் பல்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுத்தவருக்கு சலுகை வழங்குவதற்காக 005/734/0186/17 இலக்கம் கொண்ட மற்றும் 2017 | எதிர் காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | பரிந்துரை வழங்கிய 40 உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வுகள், சம்பள உயர்வு நிலுவை சம்பளம் செலுத்துதல் தொடர்பாக மீண்டும் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெப்ரவரி 02 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் அடங்கிய குழுவொன்று நியமனம் செய்யாமல் அதற்கு முரணாக நியமனம் செய்யப்பட்ட குழுக்களின் பரிந்துரையை பெற்றுக்கொண்டு 40 உத்தியோகத்தர்களுக்கு சலுகை வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மன்றத்தின் 03 பிரதான பதவியணிப் பதவிகள் ஆகிய பணிப்பாளர் (நிதி), பணிப்பாளர் (அபிவிருத்தி) மற்றும் பணிப்பாளர் (பயிற்சி) ஆகிய பதவிகளுக்காக நிரந்தர அடிப்படையில் நியமனம் வழங்கப்படாமல் இரண்டாம் தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பல வருட காலமாக நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2023 ஆகஸ்ட் 19 திகதி பணிப்பாளர் சபை தீர்மானத்தின் படி நிரந்தர அடிப்படையில் தகைமைகள் உடன் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பதற்கு அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும் இதுவரை அது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மன்றத்தின் 03 பிரதான பதவியணிப் பதவிகள் ஆகிய பணிப்பாளர் (நிதி), பணிப்பாளர் (அபிவிருத்தி) மற்றும் பணிப்பாளர் (பயிற்சி) ஆகிய 03 பதவிகளுக்காக தகைமையுடைய உத்தியோகத்தர்களை நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைவடிக்கை முறையின் ஏற்பாடுகளின் படி உத்தியோகத்தர்கள் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் 98 பங்குகளின் உரிமையுடன் வ/ப இலங்கை இளைஞர் சேவைகள் தனியார் கம்பனி 1981 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்காததுடன், கம்பனியினால் 2018 ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஸ்ரீ லங்கா யூத் சேர்விஸஸ் (பிரைவட்) லிமிடட் கம்பனி மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்துடன் ஒன்றித்து 2024 ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 16(2) மற்றும் 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரவு 6.6 இற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் கணக்கு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மன்றத்தின் நிதிக்கூற்றுக்கள் 2024 மே 21 திகதியன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2024.05.08 திகதி பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவியில் இருந்து அகற்றி பணிப்பாளர் நிதிப் பதவியில் நிறுவப்பட்டது. இந்த நிலைமை மீது இந்த தாமதம் ஏற்பட்டிருந்தது. | சட்டத்திற்கு இணங்க குறிப்பிட்ட திகதியில் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மன்றத்தினால் நிருவகிக்கப்படும் கம்பனி ஒன்றான யூத் சேர்விஸஸ் (பிரைவட்) லிமிடட் கம்பனியின் கணக்காளராக கடமையாற்றுவதற்கு வரிசை அமைச்சிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்த இலங்கை கணக்காளர் சேவையின் உத்தியோகத்தர் ஒருவர் மன்றத்தின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளராக கடமையாற்றும் போது பணிப்பாளர் (நிதி) பதவியிலும் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்டிருந்ததனால் மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை நலிவடைந்திருந்தது. | தற்போது இந்த நிலைமை சரி செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். | உள்ளகக் கணக்காய்வு சுதந்திரமாக மேற்கொள்ளக்கூடியவாறு உள்ளகக் கட்டுப்பாடு வலுப்படுத்தப்பட வேண்டும். |